Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | பிரசாந்த் |
| Father's Name | -- | ஆறுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகழந்தையில் குடியிருந்துவருகிறேன். நான் எரிவாயு சிலிண்டர் நிறுவனத்தில் சிலிண்டர் போடும் வேலை செய்கிறேன். 26.08.2018 அன்று இரவு 11 மணி வரை கடை சாத்தும்வரை எங்களது TN 41 AM 6199 பதிவு எண் கொண்டஅசோக் லேண்ட் லாரி இருந்தது. காலை 5.30 மணியளவில் வண்டியை காணவில்லை. வண்டியை எங்களது கடைக்கு முன்புதான் நிறுத்தியிருந்தோம். காலை அக்கம்பக்கம் தேடிபார்த்தோம். வண்டி கிடைக்கவில்லை என்பதால் 29.08.2018 அன்று புகார் அளித்தோம். 2 நாட்கள் கழித்துதான் வண்டி கிடைத்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

எங்கள் வீடு கேஸ் நிறுவனத்திற்கு நேர் எதிராக அமைந்துள்ளது. சுமார் 50 அடி தொலைவு இருக்கும், எங்கள் வீட்டில் இருந்துபார்த்தால், கேஸ் நிறுவனத்தில் லாரி நிறுத்துவது தெரியும் என்றால் சரிதான். எங்களது நிறுவனத்தில் 24 மணி நேரமும், ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். கேஸ் நிறுவனத்தில் சிசிடி கேமரா எதுவும் சம்பவத்தின்போது பொருத்தப்பட்டிருக்கவில்லை . பின்புதான் பொருத்தப்பட்டது. சாட்சி பின்னிட்டு , சம்பவத்தின்போது, வெளியே கேமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதாக கூறுகிறார். பொருத்தப்பட்டிருக்கும் கேமராக்குள் வாகனம் உள்ளே செல்வதையும், வெளியே வருவதையும் பார்ப்பதற்காகத்தான் பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

cc352/19

எங்களது வண்டி காணாமல் போன விபரத்தை முதலில் எனது அப்பாதான் பார்த்து வந்து சொன்னார். அதன்பின்புதான் எனது தம்பி கௌதமிற்கு விஷயம் தெரியும். வண்டி காணாமல் போன பின்பு காலை 10 மணி வரை தேடிப்பார்த்தோம். பாலசுப்பிரமணியம் எனது தாய்மாமா ஆவார். பாலசுப்பிரமணியம் போலிசுக்கு தகவல் சொல்லி போலிசார் வண்டி காணாமல் போன அன்றைய தினமே சம்பவ இடம் வந்து பார்த்தனர். விபரங்களை கேட்டு எழுதிக்கொண்டனர். காணாமல் போன வண்டி எனது அம்மா ராஜேஸ்வரியின் பெயரில் உள்ளது. ஆனால் எனது தம்பி கௌதம் தான் புகார் அளித்தார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | கந்தசாமி |
| Father's Name | -- | கருப்புசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது மன்றாம்பாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் இண்டியன் ஆயில் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். 27.08.2018 அன்று எனது வாகனத்தில் லோடு ஏற்றிவிட்டு, அந்த நிறுவனத்தில் இருந்து வெளியே வந்தபோது எதிர்த்தாற்போல் நின்றிருந்த அசா.2 ராஜேஸ்வரி லாரியை காணவில்லை என்று கூறினார். என்னிடம் அதுபற்றி விசாரித்தார். நான் காலையில் 6 மணிக்கு பார்க்கும்போது வண்டி அங்கு நின்று இருக்கவில்லை என்று கூறினேன். இரவு 11 மணிக்கு துாங்பபோகும்போது, காலை 5.30 மணிக்கு விழித்து பார்க்கும்போதும் வண்டி அங்கு நின்று இருக்கவில்லை. 2 நாட்கள் அவர்களுடன் சேர்ந்து துழாவி பார்த்தேன் வண்டி கிடைக்கவில்லை. 3 நாட்கள் கழித்து போலிசார் மூலமாக வண்டி கிடைத்தது. போலிசார் என்னை விசாரிதக்கவில்லை.

குறுக்குவிசாரணை

காணாமல் போன லாரி சுமார் 2,3 நாட்களாக அங்கு சம்பவ இடத்தில்தான் நின்றுகொண்டிருந்தது. நான் இண்டியன் கேஸ் நிறுவனத்தில் ஒப்பந்த ஓட்டுநராக பணிபுரிந்துவருகிறேன் என்றால் சரிதான். லாரி நின்றிருந்த இடத்திற்கும், இண்டன் கேஸ் நிறுவனத்திற்கும் சுமார் 50 அடி தொலைவுதான் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் 24 மணி நேரமும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் வண்டி அங்கு நின்றிருந்ததை பார்க்கவில்லை என்றாலும், நான் காணாமல் போனதாக சொல்லப்படும் லாரியை பார்க்கவில்லை என்றாலும், எனது நண்பர் கௌதம் சாட்சி

சொன்னதை வைத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/- க.செல்லையா,பிஎ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | நடராஜ் |
| Father's Name | -- | ரங்கசாமி கவுண்டர் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகழந்தை தோட்டத்தில் குடியிருந்துவருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். கடந்த சுமார் 2 வருடங்களுக்கு மேலாக ஒரு நாள் காலை 10 மணிக்கு மேலாக ஆறுச்சாமி கடைக்கு முன்பாக போலிசார் நின்று விசாரித்துக்கொண்டிருந்தனர். லாரி காணாமல் போய்விட்டதாக கேள்வியுற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. லாரி அங்கிருந்தா என்று போலிசார் என்னை விசாரித்தனர். தெரியும் என்று கூறினேன். அந்த பார்வை மகஜர் அதசாஆ. 2. போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

டீ கடைக்காரர் ஆறுச்சாமியை எனக்கு சுமார் 10 வருடங்களாக தெரியும். நான் காலை அந்த வழியாக சென்றபோது, கூட்டமாக நின்றுகொண்டிருந்ததை கண்டு விசாரித்தபோது, ஆறுச்சாமி லாரி காணாமல் போனதாக கூற, லாரி காணாமல் போன விபரத்தை கூற தெரிந்துகொண்டேன். அதசாஆ.2 தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.. என்னை விசாரித்த போலிசாரின் குறித்த பணி எனக்கு தெரியாது. நான் மட்டுந்தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ஆதிஷ்வரமூர்த்தி |
| Father's Name | -- | கிருஷ்ணசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரியகழந்தையில் குடியிருந்துவருகிறேன். நான் சலூன் கடை வைத்திருக்கிறேன். கடந்த 26.08.2018 அன்று ஒரு நாள் மாலை சுமார் 5 மணியவில் காணாமல் போனதாக சொல்லப்படும் லாரியை பிரசாந்த் ஓட்டலுக்கு முன்பாக நின்றுகொண்டிருந்ததை பார்த்தேன். காலையில் வந்து பார்க்கும்போது வண்டியை காணவில்லை என்று தேடிக்கொண்டிருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர். மேற்படி லாரி கடைக்கு முன்பு நின்றுகொண்டிருந்ததாக கூறினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அதசாஆ. 3** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

வண்டி காணாமல் போன விபரம் எனக்கு பிரசாந்த் ஓட்டல்காரர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அசா.1 கௌதம் தான் எனக்கு வண்டி காணாமல் போன விபரத்தை சொன்னார். நான் அன்றே சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றாலும், அன்றே போலிசார் வந்தனர் என்றாலும், கௌதமிடம் விசாரித்தனர் என்றாலும், என்னிடமும் , கௌதமிடம் தனித்தனியாக கையொப்பம் பெற்றனர் என்றாலும் சரிதான். நான் என்னுடைய அதசாஆ.3 கையொப்பம் இட்ட தாளில் என்ன விபரம் கண்டுள்ளது என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

**ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்**

**நீதித்துறை நடுவர் எண்.2**

**பொள்ளாச்சி**